# சுட்டி

மாத இதழ்
ஜூன்89 ரூ 1.00
100




FREE E - BOOKS , www.thamizham.net.,

# சுட்டிக் குட்டிக் கவிதைகள்

## விடிந்ததும்



இருட்டில்
சுதந்திரம் வாங்கி
விடியலுக்காய் காத்திருந்தோம்
விடிந்ததும் தான்
வெட்கமாயிருக்கிறது
இப்போது நாங்கள்
நிர்வாணமாய............?

-பாரதி மணி

## பொருள்

வகுப்பாசிரியர்
வாய்மைக்குப் பொருள் கேட்க
வகுப்புத் தோழி
வந்தனா
விரைவாக
விடையளித்தாள்
லிப்ஸ்டிக் என்று!

-சோ. நடராசன்



## கனவுகள்

ஏழைத் தொழிலாளி
எடை பார்க்கப் போனான்!
அட்டையில்
அதிர்ஷ்டம் இருந்தது-
புதையல் கிடைக்குமாம்-
பூரித்துப் போனான்!
திரும்பிப் பார்த்தவன்
திடுக்கிட்டான்-
கழற்றி விட்ட செருப்பு
காணாமல் போயிருந்தது

-ஆர்.செல்வரத்தினம்.

## தாய்க்குலம்

காலையில் வந்த
கீரைக்காரியிடம்
"நாலணா"- கீரையைத்
தர்க்கம் புரிந்து
பதினைந்து காசிற்கு
வாங்கி விட்டு
மாலையில்
புடவைக் கடையில்
சுளையாகக் கொடுக்கும்
ஈர நெஞ்சம்



-நடாதூர். வ. திருமகள்.



FREE E - BOOKS , www.thamizham.net.,

# சோவியத்-சீன புது உறவு நிலைக்குமா?

உலகின் கால்பகுதி மக்கட் தொகைக்குச் சொந்தக்காரர்களான சோவியத்தும், சீனாவும் நல் உறவு கொள்ளத் தொடங்கியுள்ளது. உலகில் உள்ள முற்போக்காளர்கள் அனைவரும் மகிழ்ச்சியுடன் வரவேற்கும் நிகழ்வாகும்.

1950 களில் இரு நாடுகளுக்கிடையேயும் இருந்த நட்புறவு என்றென்றும் நிலைத்து நிற்கும் என்று தோன்றியது. பின்னர் 1960 களின் பிற்பகுதியிலும் 1970களின் ஆரம்பத்திலும் இரு நாடுகளுக்குமிடைய தோன்றிய பகையை என்றென்றும் மாறாதது போலத் தோன்றியது. இது உலகம் முழுவதும் இருந்த கம்யூனிஸ்டுகளையே இரு கூறாகப் பிரித்து உலகம் முழுவதும் பரவ இருந்த சோஷலிச அலையைப் பலவீனப்படுத்தியது.

1959 இல் குருஷ்சேவ் மேற்கொண்ட சீன பயணத்திற்குப் பின் முப்பதாண்டுகள் நிலவிய பகை மூட்டத்தை கோர்பசேவின் சீன வரவு கலைத்துள்து. 7500 கி.மீ நீளமுள்ள சீன-சோவியத் எல்லையின் இரு பக்கங்களிலும் காணப்படும் பரஸ்பர சங்கடங்களைக் கருத்தில் கொண்டு, இரு நாடுகளும் பகையை மறந்து உறவை வளர்க்க முற்பட்டிருப்பது புத்திசாலித்தனமாகும்.

சோஷலிசத்தின் புதிய பரிமானத்தை, காலத்தின் கட்டாயத்தால் சோவியத் பூமி தழுவத் தொடங்கியுள்ளது போல, சீனவும் இந்தப் புதிய மாற்றங்களுக்கு உட்பட்டே தீர வேண்டும். இந்த இரு நாடுகளும் இணைந்து, செய்யும் சோஷலிச பரிசோதனைகள் உலகம் முழுவதும் உள்ள பொதுவுடைமையாளர்களுக்கும் நாடுகளுக்கும் பாடம் புகட்டும். அணு ஆயுத பரிசோதனைகள் போல இன்றி சோஷலிச பரிசோதனைகள் மனிதனை மேலும் சிறப்பாக வாழ்விப்பனவாகும்.

உதட்டளவில் அமெரிக்கா போன்ற முதலாளித்துவ நாடுகள் இந்த சோவியத் சீன உறவை வரவேற்பதாகக் கூறினாலும், இரு சோஷலிச பூதங்கள் ஒன்றிணைவது உலக முதலாளித்துவத்திற்கு ஆரோக்கியமானதல்ல என்பதை அவை உணர்த்தே இருக்கின்றன எனவே,

"நல்லுறவை ஏற்படுத்தி அதை வளர்ப்பதைவிட, பகையை வளர்ப்பது எளிதுதான். ஆனால் நாங்கள் ஒரு நீண்ட வேற்றுமையைக் கடந்து விட்டோம். இனி ஒன்றாக இருப்போம்" என்று கோர்பசேவ் குறிப்பிடும் ஒற்றுமை இன்னொரு முறை கெடாமல் எச்சரிக்கையுடன் பாதுகாக்கப்பட வேண்டும்.

-உலகப்பன்.

அடுத்த இதழ் : 1.10.89
காண்க நடுப்பக்கம்



FREE E - BOOKS , www.thamizham.net.,

# புதுமைப்பித்தன் விட்ட அறிக்கை:

இப்படி ஒரு ஜூன் மாதத்தில்தான் புதுமைப்பித்தன் இறந்து போனார். ஆயிற்று-அது 41 ஆண்டுகளுக்கு முன்னால்!

தமிழ்ச் சிறுகதைகளின் திருப்பு மையமாக இருந்த அவரை, இன்றைய இளைய தலைமுறையினர் பலருக்குத் தெரியவே இல்லை. "புதுமைப்பித்தனைத் தெரியுமா?" என்று கேட்டால், "தெரியும். சினிமாவில் பாட்டெழுதுகிறார்" என்றே பதில் வருகிறது. புதுமைப்பித்தனும், தன் இறுதி நாட்களில், திரைப்படத் துறைக்குப் போனார். சில படங்களுக்குத் திரைக்கதை, வசனம் எழுதினார். சொந்தமாய்ப்படம் தயாரிக்கும் முயற்சியிலும் இறங்கித் தோல்வியடைந்தார். தியாகராஜ பாகவதரின், "ராஜமுக்தி" படத்துக்கு (1947) வசனம் எழுதிக் கொண்டிருந்த போதுதான் காசநோய் முற்றியது.

வறுமைக்கும், அவருக்கும் நடந்த போராட்டத்தில், இறுதியாய் வறுமைதான் வென்றது. இடையில் ஓரிரு ஆண்டுகள் தவிர, அவர் வாழ்க்கை முழுவதும் வறுமை ஒட்டிக் கொண்டிருந்தது. கடைசியாய், இறக்கப் போகும் தருணத்தில், தமிழ் மக்களுக்கும், ஈழத்து யாழ் மக்களுக்கும், நிதி கேட்டு அவரே அறிக்கை விட வேண்டிய கொடுரமும் அவர் வாழ்வில் நேர்ந்தது. "தமிழ்நாட்டுக்கு நான் செய்த சேவை தகுதியானது. மறுக்க முடியாதது. ஆனால் நான் இன்று சாகக் கிடக்கிறேன். வறுமையால் சாகக் கிடக்கிறேன். தமிழ்நாட்டாரைப் பார்த்து, நீங்கள் எனக்கு உதவி செய்ய வேண்டும் என்று கேட்க உரிமையுண்டு" என்றார் புதுமைப்பித்தன். `உரிமைக்குர' லுக்குப் பெரிதாய் யாரும் செவி சாய்த்து விடவில்லை.

மரணப்படுக்கையில், தன் நண்பர் சிதம்பரத்திடம், "இலக்கியத்தைத் தொழிலாய்க் கொண்டுவிடாதே. இலக்கியம் வறுமையைத்தான் கொடுக்கும். அது உன்னைக் கொன்றுவிடும்" என்று சொல்லியிருக்கிறார்.

தமிழ் இலக்கிய உலகம் இதைவிட அவமானத்தை இனித் தேடிக்கொள்ள முடியுமா?

– சுபவீ


ஆசிரியர்: கு. நாராயணபாரதி. வெளியிடுபவர்: கி. இராமசந்திரன். அச்சிடுபவர்: எம். எஸ். ரவீந்திரன், ரவீந்திரன் பிரஸ்: 137, டாக்டர் நடேசன் ரோடு, சென்னை - 600 005, முகவரி 1494, அண்ணாநகர், சென்னை - 600 040.



FREE E - BOOKS , www.thamizham.net.,

## குறைந்த பட்ஜெட் வீடுகளுக்கான சிறந்த பிளான்கள்

**விலை ரூ.20.00**



மணிமேகலைப் பிரசுரத்தில் அண்மையில் வெளியாகி அதிவேகமாக விற்பனையாகிக் கொண்டிருக்கும் அருமையான புத்தகம் இது. ஒவ்வொரு பிளான்படி வீடுகட்ட கருங்கல் ஜல்லி, செங்கல், மணல், சிமெண்ட், இரும்புக் கம்பிகள், சுண்ணாம்பு, தட்டை ஓடுகள் ஆகியவை எவ்வளவு தேவைப்படும் என்ற விவரமும் இந் நூலில் இடம் பெற்றிருப்பது சிறப்பு.

### இதர நூல்கள்:

சாஸ்திரப்படி வீடு கட்டுவது எப்படி? (மனையடி சாஸ்திரம்) ரூ.10-00; தமிழ்நாட்டில் வீடுகட்டுபவர்களுக்கான புதிய விதிகள் ரூ.9-00; நிலம், வீடு வாங்குபவர்கள் - விற்பவர்கள் தெரிந்து வைத்திருக்க வேண்டிய சட்டங்கள் ரூ.6-50; வீடுகளுக்கு ஜன்னல் கிரில் வாயிற்கதவு மாதிரிகள் பாகம்-1 ரூ.10-00; பாகம்-2 ரூ.10-

*மேற்கண்ட புத்தகங்களுள் தேவையானவற்றை வி.பி.பி.யில் பெறக் கடிதம் எழுதுங்கள் அனுப்பி வைக்கிறோம். தபால்காரர் புத்தகங்களை உங்களிடம் தரும் போது பணம் செலுத்தினால் போதும். (தபால் செலவு தனி.) சென்னையில் இருப்பவர்கள் நேரில் வந்து வாங்கிக் கொள்வது சிக்கனம். ஷோரூம் விற்பனை நேரம்: காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரை. ஞாயிறு விடுமுறை.*

**மணிமேகலைப் பிரசுரம்,**

தபால் பெட்டி எண்:1447

4, தணிகாசலம் சாலை. தியாகராஜ நகர்.

சென்னை - 600 017. போன்: 442926



FREE E - BOOKS , www.thamizham.net.,

# கம்ப்யூட்டரின் மறுபக்கம்

எல்லாத் துறைகளிலும் கம்ப்யூட்டரின் ஆதிக்கம் அதிகரித்துக் கொண்டிருக்கிறது. தற்போது, தொலைபேசி இணைப்பகங்களில் கம்ப்யூட்டர் திணிப்பு தொடங்கியுள்ளது.

பொதுவாக, சேவையின் தரத்தை உயர்த்துவதற்காகவும், தொலைபேசிக்காகக் காத்திருப்போர் பட்டியலை முடிவுக்குக் கொண்டு வருவதற்காகவும், கம்ப்யூட்டர் அறிமுகப்படுத்தப் படுவதாய் அரசாங்கம் கூறுகிறது. ஆனால் அதனால் ஏற்படப் போகும் ஆட்குறைப்புப் பற்றி அரசு எதுவும் கூறாமல், மௌனம் சாதிக்கிறது.

1982 இல் வெளியான சரீன் குழு அறிக்கை அதுபற்றித் தெளிவாகவே கூறியுள்ளது. தற்போது 114. ஊழியர்கள் வேலைபார்க்கும் இடத்தில் கம்ப்யூட்டர் வந்தபின் 50 ஊழியர்களே போதுமானவராயிருப்பர் என்றும், மேலும் படிப்படியாக ஆட்களின் எண்ணிக்கையைக் குறைத்துக் கொள்ள முடியும் என்றும் அந்த அறிக்கை கூறுகிறது.

அறிவியல் வளர்ச்சி தேவை என்பதையும், தொலைபேசிக்காகக் காலங்காலமாய்க் காத்திருப்போரின் நிலை மோசமானது என்பதையும் நாம் உணர்கிறோம். ஆனாலும், வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்கனவே நெருக்கிக் கொண்டிருக்கும் நம் தேசத்தில், மேலும் பலர், இருக்கும் வேலையையும் இழக்க வேண்டிய நிலையை நாம் அனுமதிக்கலாமா?

அதிலும், அடிமட்ட ஊழியர்களே முதலில் வேலையை இழக்கப் போகின்றவர்கள். Lineman, Wireman முதலானோர் உபரிகளாகக் கருதப்படுவர்.

சில தொழிற்சங்களும் கூட கம்ப்யூட்டருக்கு ஆதரவு தெரிவித்துள்ளதாய் அரசு கூறுகிறது. சோசலிச உணர்வும், தொழிலாளர் நலத்தில் அக்கறையும் உடைய எந்தத் தொழிற்சங்கமும் இதற்குத் துணைபோக முடியாது! துணை போகும் சங்கங்கள் இப்படியே இனிக் காலந்தள்ள முடியாது!

-பழநி

## சுட்டி முன் இதழ்கள்

100 மாத சுட்டி இதழ்களில் நீங்கள் படிக்காமல் விட்ட முன் இதழ்களையும் படிக்கலாமே. 90 முன் இதழ்கள் அனுப்ப இயலும் அவை: இதழ் எண்கள்: 2, 6, 8, 10 முதல் 18, 20, 23 முதல் 69, 71 முதல் 100. இதழுக்கு 50 காசு வீதம் அஞ்சல் தலைகள் அல்லது பணவிடை (M.O.) அனுப்பினால் உடனே அஞ்சலில் வந்து சேரும். மொத்தமாக 90 இதழ்களைப் பெற ரூ.40/- அனுப்பினால் போதும்.



FREE E - BOOKS , www.thamizham.net.,

# பட பதில்கள்

- மனிதன் குரங்கிலிருந்து பிறந்தவனில்லை, எறும்பிலிருந்து பிறந்தவன் என்ற புதுக்கருத்தை நிரூபிக்க முடியுமா?



- கோடையில் செலவில்லாமல் ஏர்கண்டிஷன் சுகம் பெற வழி என்ன?



FREE E - BOOKS , www.thamizham.net.,

*With Best Compliments From*

# SANMAC MOTOR FINANCE LIMITED

*"GEMS COURT",*
A-8, First Floor
14, Khader Nawazkhan Road
Madras - 600 006. PH:860 300

HIRE-PURCHASE

LEASING

PUBLIC DEPOSITS

ASSOCIATE COMPANIES:

**SANMAC CHITS PRIVATE LIMITED**

**SANMAC BUILDERS PRIVATE LIMITED**

"GEMS COURT",
A-8, Firts Floor
14, Khader Nawazkhan Road
Madras - 600 006



FREE E - BOOKS , www.thamizham.net.,

# வாசகர் எதிரொலி




சென்ற இதழ் சுட்டியின் பின்பக்க வெளி அட்டையில் வெளியான புகைப்படமும், வாசகமும் சுட்டியின் வழக்கமான கூர்மையுடன் இல்லையே எனப் பல வாசகர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். அந்தப் புகைப்படத்தில் இடம் பெற்ற 3 பிரபல மனிதர்கள் யார் என்பதைப் பலர் புரிந்து கொள்ள முடியாததே இந்த விமர்சனத்திற்குக் காரணம். பக்கத்தில் விளக்கமாக வெளியிட்டுள்ளோம். இப்போது சொல்லுங்கள்: வாசகமும் புகைப்படமும் ஆழ்ந்த அர்த்தமுள்ளவைதானே!

- ஆசிரியர் குழு.

□ இந்தந்த இடங்களில் மின்வெட்டு என்ற நம் அரசின் அறிவிப்பு திருடர்களுக்கு எவ்வளவு சாதகமாக அமைந்துவிடுகிறது என்பதை "சுட்டி"க் காட்டியிருந்த அட்டைப்படக்கார்டூன் நெஞ்சில் தீயெனச் சுட்டது.

- பி.எல். பரமசிவம், மதுரை-1.

□ சுட்டிக் குட்டிக் கவிதைகள் யாவும் புதிய பரிமாணத்தோடு, நாட்டின் நடப்பைத் தெள்ளத் தெளிவாகவும், அதே சமயத்தில் அழகாகவும் படம் பிடித்துக் காட்டிவிட்டன. சபாஷ்!

- நா. கிருஷ்ணவேலு, புதுச்சேரி-3.

□ கற்பைப் பற்றிக் கதை கதையாய்ப் பேசும் நம் இந்திய அரசுதான், பம்பாய் போன்ற பெரிய நகரங்களில் வாழும் விபச்சாரிகளுக்கு அடையாள அட்டை கொடுத்து அங்கீகரிக்கும் சட்டத்தைப் பரிசீலனை செய்து வருகிறது. இதன் மத்தியில் சிறுமிகள் விபச்சாரிகளாக்கப்படுவதைக் கண்டிக்க அரசை எதிர்பார்ப்பது பேதமை. சேவை மன்றங்கள் தாம் செயல்முறையில் இறங்க வேண்டும்.

- பி. லேனாதாசன், முருங்கப்பேட்டை.

□ "கல்விச் சுரண்டல்" கட்டுரை படிக்க வேதனையாக இருந்தது. ரூ.150 சம்பளத்திற்கு நர்சரி பள்ளி வேலைக்குச் சம்மதிப்பவர்கள், வீட்டிலேயே ஒரு தையல் எந்திரத்தை நம்பினால் மாதம் 300, 400 சம்பாதிக்கலாம். சுதந்திரமாகவும் வாழ முடியும். சிந்திப்பார்களா?

- ஸி. சௌரிராஜன், ஸ்ரீரங்கம்.

□ இரண்டாம் பரிசுபெற்ற "போராட்டம் தோல்வி அடைந்தது" என்ற சி.எஸ். மோகனின் சிறுகதை அற்புதம். தமிழ்த் திரைப்படங்களின் அனைத்துப் பிரிவுகளையும் பற்றி எழுதி வந்த கட்டுரை ஆக்கப்பூர்வமாகவும், அறிவுப் பூர்வமாகவும், தெள்ளந் தெளிவாகவும் அமைந்தது. பாராட்டுக்கள்!

- நாகி, முத்தியால்பேட்டை.



FREE E - BOOKS , www.thamizham.net.,

## நர்மதாவின் புதிய நூல்கள்

| | | |
|---|---|---|
| தேரோடும் வீதி | - நீல பத்மநாபன் | 100-00 |
| சொப்பன பூமி | - திலகவதி | 18-00 |
| என்னுடைய போதி மரங்கள | - மேத்தா | 7-00 |
| உள்மன ஆற்றல்கள | - வாசு | 18-00 |
| திருக்குறள | - எளிய தமிழ் உரையுடன் | 24-00 |
| நர்மதா ஆங்கில ஆசான் | | 27-00 |
| மன நோய்களுக்கு மனோ தத்துவ சிகிச்சை | | 16-00 |

# நர்மதா பதிப்பகம்

நல்ல நூல் வெளியீட்டாளர்கள்
16/7, ராஜாபாதர் தெரு, பாண்டிபஜார்
தியாகராயநகர் - சென்னை-600 017.
போன்: 446281

# ரத்னா பிளாஸ்டிக்ஸ்

எலக்ட்ரீகல்ஸ் ஸ்விட்ச் போர்டு,
பிளாஸ்டிக் க்ளோஸைன்போர்டு,
மற்றும்
டூம் லைட்ஸ் தயாரிப்பாளர்கள்.
5, சிவஞானம் சாலை.
தியாகராய நகர், சென்னை-600 017. போன்:440124

**சதம் போட்ட**

**சுட்டிக்கு**

**நல்வாழ்த்துக்கள்**

-ராஜேந்திரகுமார்.






FREE E - BOOKS , www.thamizham.net.,

இரண்டாம் பரிசுபெறும் சிறுகதை:

# ஆங்கோர் ஏழைக்கு...

-மு.செ.பிரகாஷ்

அந்தச் சின்னக் குடிசையில் பாலு சிம்னி விளக்கின் வெளிச்சத்தில் முல்லைக்கு தேர்கொடுத்த பாரியைப் பற்றி படித்துக் கொண்டிருந்தான். அவனது தாய் மூலையில் இருமிக் கொண்டு முடங்கி கிடந்தாள். இன்று வகுப்பறையில் பணம் கட்டாத காரணத்திற்காக அவன் மட்டும் எழுந்து நின்றான். "நாளைக்கெல்லாம் பணம் கட்டாட்டி ஹெட்மாஸ்டர்ட போகனும், பார்த்துக்கோ" வாத்தியார் கூறியது நினைவுக்கு வர பாலுவுக்குப்பணம் தராத அப்பாவின் மேல் கோபம் கோபமாய் வந்தது. இன்றைக்காவது பணம் வாங்கிவிட வேண்டும் என்று வைராக்கியத்தோடு அப்பாவுக்காக காத்திருந்தான்.

"இன்னைக்காவது எனக்கு பணம் கொண்டு வந்தீங்களா?" அவனுடைய அப்பா வந்ததும் வராததுமா எரிந்து விழுந்தார். "உன் ஆத்தாவுக்கு மருந்து, மாத்திரை வாங்கவே கையில இருந்த காசு பத்தல, பொறுத்தது பொறுத்துட்ட நாளைக்கு ஒரு நாள் பொறுத்துக்கோ. நாளைக் கழிச்சு கண்டிப்பா கொடுத்துடலாம்" என்று சொல்லிவிட்டு வாங்கிவந்த மாத்திரைகளை தன் மனைவியிடம் கொடுத்து விட்டு பாலுவின் அப்பா உறங்கப் போய்விட்டார்.

மறுநாள் வாத்தியார் அட்டெண்டன்ஸ் எடுத்து முடித்ததும் பாலுவைப் பார்த்து "இன்னைக்கு பணம் கொண்டு வரலையா?" என்றார். "இல்லே சார்... நாளைக்கு கண்டிப்பா கொண்டு வந்துடுறேன் சார்" பாலு கண்கலங்க பதிலளித்தான். "நாளைக்கு... நாளைக்குன்னு எத்தனை நாளைத்தான் கடத்துவ நீயும். உன் காரணத்தையெல்லாம் ஹெட்மாஸ்ட்டர் கிட்ட சொல்லிக்கோ போ" வாத்தியார் அக்னிப் பிழம்பானார். "சார்-நாளைக்கு கண்டிப்பா கொண்டு வந்துடறேன் சார்" என்ற பாலுவின் கெஞ்சல் வாத்தியாரிடம் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை. பாலு மெதுவாக வகுப்பைவிட்டு கலங்கிய கண்களோடு வெளியேற, "ஆயிரம் சத்திரம் வைத்து சோறு போடுவதைக் காட்டிலும், ஆலயங்கள் பல வைப்பதைக் காட்டிலும், ஓர் ஏழைக்கு எழுத்தறிவிப்பதே சிறந்த தர்மம்" என்ற பாரதியின் பாடலை வாத்தியார் மாணவர்களுக்கு நடத்தினார்.


மு. செ. பிரகாஷ், 8, வ.உ.சி. தெரு,
கட்டபொம்மன் நகர், மதுரை - 625 002.



FREE E - BOOKS , www.thamizham.net.,

# மருத்துவர்களா? கூட்டுக் கொள்ளையரா?

பல ஊர்களிலும், நகர்களிலும் கொள்ளைக்காரர்கள் சிலர் மருத்துவர்களாக மாறுவேடமணிந்திருப்பதாகத் தெரிகிறது. வெறும் ஜலதோஷம் என்று இவர்களிடம் சென்றால் போதும். நம்மீது அளவுக்கு மீறிய அனுதாபம் காட்டி, இரத்தப்பரிசோதனைக்கு அனுப்புவார்கள். "ரிசல்ட்" வந்தவுடன் புதிய சந்தேகங்களை எழுப்பி பயமுறுத்துவார்கள். இவர்கள் ஏற்படுத்திய பயத்தில் பல இரவுகள் தூக்கம் கெட்டு, எவ்வளவு செலவு செய்யவும் நாம் தயாராகி விடும் மனோநிலை பெற்றுவிடுவோம். "எக்ஸ்ரே" எடுக்கச் சொல்வார்கள். இப்படி பலரிடம் அலைகழித்து நாம் பாடுபட்டு சம்பாதித்த பணத்தில் ஒரு பகுதியை பிடுங்கிய பின்பு-பயப்படுவதற்கு ஒன்றுமில்லை என்று டானிக் எழுதிக் கொடுத்து அனுப்புவார்கள். ஏழுநாளில் மருந்தின் றிச்சரியாகும் வெறும் ஜலதோஷம் இந்தப்பாடு படுத்தப்படுகிறது. நமது மருத்துவ அறியாமையைப் பயன்படுத்தி நம்மை வைத்து ஒரு கூட்டுக் கொள்ளையே இவர்கள் நடத்துகிறார்கள்.



டாக்டர் சிபாரிசு செய்யும் இரத்தப் பரிசோதனை நிலையம், எக்ஸ்ரே நிலையம், அட்மிட் செய்ய சிபாரிசு செய்யும் மருத்துவமனை, நமக்கு எழுதிக் கொடுக்கும் விலை உயர்ந்த டானிக் போன்ற அனைத்திலும் டாக்டருக்கு கனிசமான கமிஷன் உண்டு. அவர் நம்மிடம் வாங்கும் மருத்துவக் கட்டணத்தை விட இதில் பார்க்கும் லாபமே அதிகம்.

மருத்துவத் தொழில் என்பது சேவை, வியாபாரம் என்ற இரு கட்டங்களைக் கடந்து இன்று கொள்ளை என்ற பயங்கரநிலைக்கு வந்திருக்கிறது. பரிதாபத்திற்குரிய நோயாளியை வைத்து, அநியாயமாக பயமுறுத்தி பணம் சம்பாதிப்பதற்கும், வீட்டில் நுழைந்து கத்தியைக் காட்டி பணம் பிடுங்குவதற்கும் ஒன்றும் பெரிய வேறுபாடில்லை.

நாட்டில் நடத்தப்படும் சிசேரியன் பிரசவ அறுவைச் சிகிச்சைகளில் பாதியும், "அல்ட்ரா சவுண்டு" "காட்ஸ்கான்" போன்ற விலையுயர்ந்த பரிசோதனைகளில் 40% மும் தேவையற்றே நடத்தப்படுவதாகத் தெரிகிறது. இன்னும் பல ஆபத்தான அறுவை சிகிச்சைகளும் வேண்டுமென்றே தெரிந்தும் பணம் பறிக்கும் நோக்குடன் தேவையற்று நடத்தப்படுகின்றன. மருத்துவ உலகமே சீரழிந்து வரும் சூழலிலும், உயர்ந்த மருத்துவ நல்லொழுக்கத்தைக் கடைப்பிடிக்கும் மனித நேய மருத்துவர்களும் இல்லாமலில்லை. நெருப்பிலும் தீப்பற்றா இந்தக் கற்பூரங்கள், தாம் மனித இனத்தின் பாது காவலர்கள்!

-ஸ்டெனிஸ்லாஸ்



FREE E - BOOKS , www.thamizham.net.,

# இராமன் ஒழுக்கச் சீலனா?

ஒழுக்கச்சீலன், ஏகபத்தினி விரதன், கடவுளின் அவதாரம் என்று இராமனைப்பற்றி சொல்லப்பட்டு வருவதும், தொலைக்காட்சி இராமாயணம் இதை நெய்யூற்றி வளர்ப்பதும், வால்மிகி இராமாயணத்தைப் படிக்கும் போது சுத்தப் பொய்யாகி விடுகிறது. வால்மிகி இராமாயணம் சொல்லும் அப்பட்டமான உண்மை இதுதான்:-

காலை முதல் நண்பகல் வரை இராமன் மதத் தொடர்பான ஒழுக்கங்கள், நடைமுறைகள், மற்றும் சடங்குகளை நிறைவேற்றுவதில் காலத்தைக் கழித்தான். நண்பகலுக்குப் பின் அரசவைக் கோமாளிகளுடனும், அந்தப்புரப் பெண்களுடனும் மாறி மாறித் தன் நேரத்தைக் கழித்தான். அந்தப் புரப் பெண்களுடன் கூடிக்களித்து அயர்ந்திட்டால், கோமாளிகளுடன் பேசிக் களிப்பான்; கோமாளிகளுடன் பேசிக் களைப்புற்றால், அந்தப்புரப் பெண்களை நோக்கி ஓடுவான்.

(வான்மீகி இராமாயணம், உத்தரகாண்டம் சரகம் 43, சொலவகம்:9)

இராமனின் உணவில் அறுசுவைப் பண்டங்கள் அனைத்தும் இடம் பெற்றன. மது, இறைச்சி, பழவகைகள் அனைத்தும் அவன் உண்டான். இராமன் அளவுக்கதிகமாகவே மது அருந்தும் பழக்கத்தைக் கொண்டிருந்தான். அப்படிக் குடித்துவிட்டு. அவன் போடும் கூத்தாட்டத்தில் சீதையையும் கலந்து கொள்ளச் செய்தான்.

(உத்தரகாண்டம் சரகம் 42, சொலவகம்:8)

அந்தப்புரத்தில் இயல், இசை, நாட்டியத்தில் புகழ் பெற்ற கின்னரி, உதமா மற்றும் தேவ உலகப் பெண்கள் போன்ற பேரழகிகள் இருந்தனர். இவர்களும் போதாதென்று, நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் பெண்ணழகிகள் எல்லாரும் அவனுடைய உவளகத்திற்குக் கொண்டு வரப் பெற்றனர். இப்படிப்பட்ட அழகிகளின் நடுவில்தான் இராமன் குடித்துக் கூத்தாடிக் கலந்து மகிழ்ந்து களிப்புற்றுக் கிடந்தான். அப்பெண்களெல்லாரும் இராமனை மகிழ்விக்கப் பெரும்பாடு பட்டனர். அச் செயல்களுக்குப் பரிசாக அப்பெண்களுக்கு விலையுயர்ந்த மணிமாலைகளை அணிவிப்பானாம். வஞ்சியர்களின் வளையத்துள் கிடந்த ஆடவர்களுள் இளவரசன் இராமன்தான் முதல்வன் என்கிறார் வால்மீகி. இவையெல்லாம் இராமனின் ஒருநாள் நிகழ்ச்சிகளல்ல. இராமனுடைய அயோத்தி வாழ்வின் அன்றாட நிகழ்ச்சிகளே என்கிறார் வால்மீகி.

நாட்டின் ஆட்சி நடவடிக்கைகளில் இராமன் எப்போதுமே பங்கேற்றதில்லை என்கிறார் வால்மீகி. நாட்டு மக்களின் குறைகளைக் கேட்டு, அவற்றைத் தீர்க்கிற பழங்கால மன்னர்களின் பழக்கத்தைக் கூட இராமன் ஒருபோதும் கடைப் பிடிக்கவில்லை என்று எழுதுகிறார் வால்மீகி. தம் மக்கள் குறைகளை ஏதோ ஒரு தடவை மட்டும் இராமன் நேரில் கேட்டதாக வால்மீகி ஒருசூழ்நிலையைக் குறிப்பிடுகிறார். அதுவும் ஒரு துயரமான நிகழ்ச்சியாய்த் தெரிகிறது. அக்குறையைத் தாமே தீர்த்திடுவதாகப் பொறுப்பேற்றுக் கொள்கிறான் இராமன். அப்படி செய்கையில் வரலாறு காணாத கடுங்கொடிய குற்றத்தைச் செய்கிறான் இராமன் அதுதான் சூத்திரனான சம்புகன் பார்ப்பனர்களுக்கே உரித்தான தவத்தைச் செய்ததற்காக இராமனால் படுகொலை செய்யப்பட்ட நிகழ்ச்சியாகும்.

-செய்தி:- தமிழ்நிலம்


FREE E - BOOKS , www.thamizham.net.,

# 100வது இதழுக்குப் பிறகு ...

நண்பர்களே !

நெருப்புக் கடலில்; கற்பூரப்படகை வைத்துக் கரைசேருவதுபோல், சொல்லொண்ணாப் பிரச்சனைகளைக் கடந்து சுட்டியின் 100வது இதழை உங்கள் முன் நிறுத்தியுள்ளோம்.

ஓரிதழும் நிற்காமல், ஓரிதழும் தாமதமாகாமல், எந்த நசிவு சக்திகளின் சோதனைகளுக்கும் பலியாகாமல், முதல் இதழில் இருந்த அதே மிடுக்கும், உணர்வும், நேர்மையும், அஞ்சாமையும் இந்த 100 இதழ்களிலும் கெடாமல் பாதுகாத்து வந்துள்ளோம்.

இதுவரை என்ன சாதித்து விட்டாய் என்று கேட்போர்க்குச் சுட்டியின் பதில் எதிர்ப்பக்கத்தில் உள்ளது. விரிவான பதிலை நம் அன்பார்ந்த உயிரனைய வாசகர்கள் கூறுவார்கள்.

100 இதழ்களை வெளிக்கொணர எங்களோடு துணை நின்ற அத்தனை அன்பர்களுக்கும் தனிப்பட்ட முறையில் இவ்விதழில் நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவிக்கிறோம்.

சுட்டியை 100 மாதங்கள் கொணர மேற்கொண்ட சிரமங்களைப் பின்னோக்கிப் பார்த்தால், 100 மைல்கள் ஓடிய களைப்புத் தெரிகிறது. அடுத்த ஓட்டத்திற்குத் தயார் செய்யவும், இன்னும் சிறப்பான ஆற்றல் பெறவும் சுட்டிக்கு 3 மாத கால ஓய்வு தேவை. அதாவது ஜுலை, ஆகஸ்டு, செப்டம்பர் ஆகிய 3 மாத கால ஓய்விற்குப்பின் சுட்டி அக்டோபர் முதல் தேதி, புத்துணர்ச்சியுடன் துள்ளி வரும்! தன்னை வலுப்படுத்திக்கொள்ளவும், இன்னும் சிறப்பாகப் பணியாற்றவும் சுட்டி வேண்டுகின்ற இந்த ஓய்விற்கு நீங்கள் மனப்பூர்வமாக அனுமதியளிப்பீர்களல்லவா?

இந்த 3 மாத காலத்தில் வாசக நண்பர்களிடம் வேண்டுகின்ற பணிகள் இரண்டு. உங்களால் எவ்வளவு சந்தாதாரர்களைச் சுட்டிக்குச் சேர்த்துக் குவிக்க முடியுமோ, அவ்வளவு சேருங்கள். ஆயிரக்கணக்கில் சந்தாதாரர்கள் உள்ள வலுவான இதழாக சுட்டியைப் பலப்படுத்துவது உங்கள் கையில்! நீங்கள் வேண்டுகின்ற நண்பர்களுக்கு இலவச மாதிரி இதழை அனுப்ப தயாராக இருக்கிறோம். எழுதுங்கள்.

இரண்டாவதாக, கடந்த சுட்டி இதழ்களின் போக்கை ஒவ்வொரு வாசகரும் விமர்சித்து எழுதுவதுடன், இனி வரவிருக்கும் 101 வது இதழ் முதல் சுட்டி வடிவிலும், உள்ளடக்கத்திலும் எவ்வாறு இருக்க வேண்டும் என்று நடைமுறைக்கு உகந்த ஆக்கப்பூர்வமான ஆலோசனைகளை அவசியம் குறிப்பிட வேண்டுகிறோம்.

சுட்டிக்கு நீங்கள் அறிமுகப்படுத்தும் புதிய சந்தாதாரர்களும், நீங்கள் அளிக்கும் விமர்சனமும், ஆலோசனையும், வலுவான புதிய சுட்டியை தோற்றுவிக்கும்.

மீண்டும் 1-10-89 அன்று சந்திப்போம்.

உங்கள் பதிலை ஆவலுடன் எதிர்நோக்குகிறோம்.

அன்புடன்
ஆசிரியர் குழு



FREE E - BOOKS , www.thamizham.net.,




FREE E - BOOKS , www.thamizham.net.,



நூற்றாண்டுகளாக
சித்தர்கள் தேடிப்பிடித்து நமக்கு வழங்கிய
அரிய மூலிகைகளைக் கொண்டு

50 ஆண்டு அனுபவமுள்ள டாக்டரால் உருவாக்கப்பட்ட
இரு பெரும் அற்புத படைப்புகள்

**டாப்ஜைம்** **பவர்காப்**

(முற்றிலும் பாதுகாப்பான மருந்துகள்)

வாய்வு-வயிற்றுக்
கோளாறுகளுக்கு நிச்சயமான
நிவாரணம் பெற
"டாப்ஜைம்" காப்சூல்ஸ்

- அஜீரணம்
- புளித்த ஏப்பம்
- ருசியின்மை
- வயிற்றுப் பொருமல்
- கைகால் குடைச்சல்
- நெஞ்செரிச்சல்
- பசியின்மை
- மலச்சிக்கல்
- வாய்வுப் பிடிப்பு
- உப்புசம்

விரைவான நிவாரணம் பெற "டாப்ஜைம்" ஆண், பெண் எல்லா வயதினரும் சாப்பிடலாம்.

*குடலை கெடுக்கும் சோடா உப்பு கலக்காதது.

பெண்களுக்குப் பாது
காப்பான ஸ்பெஷல்
ஹெல்த் காப்சூல்ஸ்

- இரத்தக் குறைவு
- இடுப்பு-முதுகுவலி
- உஷ்ணக் கோளாறுகள்
- பசியின்மை
- ஜெனரல் வீக்னஸ்
- உடல் அசதி
- உடல் வலி
- மலச்சிக்கல்
- நல்ல தூக்கமில்லாமை
- ஆகியவற்றுக்கும்

நோஞ்சலான பெண்கள் வாளிப்பான உடலைப் பெறவும் சிறந்த ஹெல்த் காப்சூல்ஸ் "பவர்காப்". கர்பிணிப் பெண்களுக்கும், பால்கொடுக்கும்தாய் மார்களுக்கும் மிகச் சிறந்தது "பவர்காப்"

எல்லா முக்கிய மருந்து கடைகளிலும் கிடைக்கும்.

கிடைக்காத பகுதிகளில் உள்ளவர்கள் தபாலில் பெற (தபால் செலவு உள்பட) 50 காப்சூல்ஸ் "டாப்ஜைம்" ரூ.38/- 50 காப்சூல்ஸ் "பவர்காப்" ரூ.45/- மணியார்டர் அனுப்பவும்

SOLE DISTRIBUTORS: PHONE-615649

SRI BHARATH MARKETING CORPORATION,
1494, 13th Main Road, Annanagar, Madras-600 040
Mfg. LIC. No.430, RICH PARMA, Madras - 600 040



FREE E - BOOKS , www.thamizham.net.,

திரைப்பட விமர்சனம்

# புதிய (வே)பாதை

அண்மையில் வெளிவந்த படங்களில் அபார வெற்றி பெற்றிருக்கும் படம் "புதிய பாதை". ரசிகர்கள் அலை மோதுகின்றனர்; பத்திரிகைகள் பாராட்டிய வண்ணம் உள்ளன. ஆனந்த விகடன் 52 மார்க் போட்டு அகமகிழ்ந்திருக்கிறது.

கதை இதுதான்:- ஊரே பார்த்துப் பயப்படும் ஒரு ரௌடியை, ஒரு பெண் திருத்தி நல்லவனாக்குகிறாள். அந்தப்பெண், அந்த ரௌடியால் ஏற்கனவே கற்பழிக்கப் பட்டவள். ஆகவே, "கல்லானாலும் கற்பழித்தவன்" என்கிற பாசத்தாலும், பக்தியாலும், அவனையே மணந்து கொண்டு, ஒரு குழந்தைக்கும் தாயாகிறாள். எதிரிகளின் சூழ்ச்சியால் அப்பெண் இறந்துவிட, கதாநாயகன் எதிரிகளைப் பழி வாங்காமல், குழந்தையை வளர்க்கத் தன் வாழ்வை அர்ப்பணித்துக் கொள்கிறான்.

புதிய இயக்குநர் பார்த்திபன் காட்டும் புதிய பாதை இதுதான். சில நேரங்களில் சில மனிதர்கள், நல்லவனுக்கு நல்லவன், சிறை, வண்டிச் சக்கரம் போன்ற பழைய பாதைகளிலிருந்து கொஞ்சம் கொஞ்சம் எடுத்துப் புதிய பாதையை அமைத்திருக்கிறார்.

பாக்கியராஜ், பாண்டியராஜன் ஆகியோரின் மரபில் வந்த இவர் தன் 'மரபுக்கு'க் களங்கம் வந்துவிடாமல், மோசமான இரட்டை அர்த்த வசனங்கள், பெண்களின் கழிப்பறைக்குள் போய் வெளிவந்து "உள்ளே வித்தியாசமா இருக்கே" என்று ஆச்சரியப்படும் ஆண்கள், டான்ஸ் ஆடும் போது, இடுப்புக்கு மேல் பாவாடையைத் தூக்கும் பெண் என்று எல்லாச் 'சிறப்பு'க்களையும் இடம் பெற வைத்துள்ளார்.

கதாநாயகன் பல பெண்களிடம் தொடர்பு வைத்திருப்பதைப் படத்தில் காட்டியுள்ள பார்த்திபன், கதாநாயகி மட்டும், தனக்கு விருப்பமில்லாவிட்டாலும், ரௌடியாய் இருந்தாலும், தன்னைக் கற்பழித்து விட்ட ஒரே உயர்ந்த காரணத்திற்காக அவனையே திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்னும் அரிய கருத்தை வெளியிட்டுள்ளார். தாய்க்குலம் பாராட்டுகிறது.

தமிழ்மக்களின் கலாரசனை இப்படியா தரம் தாழ்ந் போக வேண்டும்?

–வசந்


FREE E - BOOKS , www.thamizham.net.,

இதழ்தோறும் சுட்டியை

அழகுமிகு ஆப்செட்

அச்சமைப்பில்

உருவாக்குபவர்கள்.

# ரவீந்திரன் பிரஸ்

தரமான ஆப்செட் அச்சுக்குச் சிறந்த இடம்

137, டாக்டர் நடேசன் ரோடு,

திருவல்லிக்கேனி,

சென்னை-600 005. தொலைபேசி: 846006.

*உரிமையாளர்,*
எஸ்.எம். ரவீந்திரன்,




FREE E - BOOKS , www.thamizham.net.,

ஆசிய நாடுகள்:

# பங்களா தேஷ்



நூற்றாண்டுகளாக "தங்க வங்கம்" என்று அழைக்கப்படும் "பங்களா தேஷ்" இன்று உலகின் ஏழை நாடுகளில் ஒன்றாகும். ஏறத்தாழ தமிழ்நாடு அளவே உள்ள இதன் நிலப்பரப்பில் (1,44,000 ச.கி.மீ.) தமிழ் நாட்டைப் போல இரு மடங்கு மக்கள் வசிக்கின்றனர் (10 1/2கோடி).

கங்கை, பிரமப்புத்திரா, மெக்னா ஆகிய பெரிய நதிகள் பாயும் இந்த டெல்டா பூமியை, வானத்திலிருந்து பார்த்தால், எங்கு நிலம் முடிகிறது எங்குக் கடல் துவங்குகிறது என்று தெரியாத அளவு ஒரே சமவெளியாகவே இருக்கும். நதிகள் தங்கள் போக்கை மாற்றி கிராமங்களை அழிப்பதும், கடும் புயல் வீசி கணக்கற்ற அழிவை ஏற்படுத்துவதும் இங்கு வாடிக்கை.1970 ஆம் ஆண்டு புயல் 3 லட்சம் பேரை மாய்த்தது.

உலகப்புகழ் பெற்ற மஸ்லின் துணி இந்நாட்டினது. 18 ஆம் நூற்றாண்டில் டாக்கா முஸ்லீம்கள் இதனை அணிந்து செல்வதைப் பார்த்து வெள்ளையர் மஸ்லின் என்று இதனை திரித்து அழைத்தனர்.

தமிழ்க் கவிஞர்கள் வருணிக்கும் மருத நிலத்தின் அத்தனை எழிலும் வளமும் இங்கிருப்பினும், உலகின் 80% சணல் உற்பத்தியை இம்மண் மட்டுமே பெற்றுத் தந்த போதிலும், மக்கள் ஏழ்மையின் உச்சக்கட்டத்தில் தான் வாழ்கிறார்கள். உலகின் பிற நாடுகளில் குப்பையில் எறியக்கூடிய பொருட்களை இங்கு வாழ்க்கைக்காக விற்போரையும் வாங்குவோரையும் பார்க்க முடியும். கிழக்கு வங்கம் பாகிஸ்தானாக பிரிக்கப்படவிருந்த போது ஜின்னா, முழுவங்கத்தையும், சிறப்பாக வங்கத்தின் செல்வம் குவிந்திருக்கும் கல்கத்தாவையும் நாம் பெற வேண்டும். இல்லாவிடில் வறுமை நிறைந்த கிராமச் சேரியாகவே கிழக்கு விளங்கும் என்று கூறினாராம்.

மேற்கு பாகிஸ்தானிலிருந்து, கிழக்கு பாகிஸ்தான் பிரிய நினைத்ததற்கு கிழக்கின் மேல் உருதுமொழி திணிக்கப்பட்டு, வங்காள மொழி இரண்டாந்தரமாக்கப்பட்டது முக்கிய காரணமாகும். முஜிபிர் ரகுமான் தலைமையில் நடந்த உள்நாட்டுப் போரில் 10 லட்சம் பேர் வீரமரணமெய்தினர். 1 கோடி பேர் இந்தியாவிற்குள் அகதிகளாக நுழைந்தனர். தனி வங்காள தேசத்தைப் பெறும் விடுதலைப் போராட்டத்தில் இம்மக்கள் விரைவில் வெற்றி பெற இந்தியாவின் இராணுவமே காரணமாகும். (1971)

இடைவிடா இயற்கை, அரசியல் சோதனைகளால் சிதைந்து போயிருக்கும் இந்நாட்டின் படித்தவர்கள் பலரும் வெளிநாடுகளில் வசதியாக வாழ்கிறார்கள். பல பெரிய அறிஞர்களை உருவாக்கிய இந்த மண்ணில் எழுதப் படிக்கத் தெரிந்தோர் தொகை இந்தியாவை விடக் குறைவு. ஏழ்மைக்கு நண்பர்களாக சத்துணவின்மையும், உடல் நலிவும், வயிற்றுக் கோளாறும், காலராவும் இங்கு மிகுந்துள்ளன.

சென்ற ஆண்டு நடந்த பொதுத் தேர்தலில் எதிர்க்கட்சிகள் அனைத்தும் தேர்தலைப் புறக்கணித்த சூழலில், மிகக் குறைவானவர்களே வாக்குச் சாவடிக்குச் சென்ற நிலையில், எதிர்ப்பின்றி எர்சாத்தின் ஜாடியா கட்சி வெற்றி பெற்று எர்சாத் தன் குடியரசு தலைவர் பதவியைத் தக்க வைத்துக்கொண்டுள்ளார். அண்மையில் அவர் இசுலாமிய சமயத்தை பங்களா தேஷின் தேசிய சமயமாக்கியுள்ளது, விடுதலைப் போராட்டத்தின் உணர்வைக் குலைத்து, மீண்டும் பாகிஸ்தானுடன் இந்நாட்டை இணைக்க வழிவகுக்கும் என்று எதிர்க்கட்சிகள் முழங்கி வருகின்றன.

— உலகப்பன்.



FREE E - BOOKS , www.thamizham.net.,

WITH BEST COMPLIMENTS FROM-

**M.K.S. WIRES & NAILS**

4E, ANNA STREET

SRINIVASA NAGAR

PADI

MADRAS - 600 050



தொலைபேசி : 864290

சுட்டியை இதழ்தோறும்
கம்ப்யூட்டரில் வடிவமைத்துத்
தருபவர்கள்

**காம்ப்செட் கிராபிக்ஸ்**

லேசர் அச்சுக் கோப்பாளர்கள்
B-2, 6வது மாடி, J.P.டவர்ஸ்,
7/2 நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலை,
சென்னை - 600 034.

உரிமையாளர்: ஆர்.நந்தகுமார்.





FREE E - BOOKS , www.thamizham.net.,

# சுவர்கள் இடிகின்றன!

அன்புள்ள ரேவதி,

உண்மையை எழுதியிருக்கிறாய்; என் புத்தியில் உரைக்கிற மாதிரியும் எழுதியிருக்கிறாய்.

ஏதேனும் ஓர் இயக்கம் சார்ந்தே நாம் போரிட வேண்டும் என்னும் கருத்தில் எனக்கும் உடன்பாடுதான். ஆனாலும், இரண்டு காரணங்களே இதுவரை என்னைத் தடுத்துக் கொண்டிருந்தன.

எந்த இயக்கத்தில் சேருவது என்னும் குழப்பமும், எந்த இயக்கத்தோடும் நூற்றுக்கு நூறு நம்மால் கருத்து வேற்றுமைகள் இல்லாமல் இருக்க முடியுமா என்னும் கேள்வியுமே, முதல் தடைச் சுவர்.

கட்சி, இயக்கம் என்று உள்ளே போய்விட்டால், தனிமனிதச் சுதந்திரம் பாதிக்கப்பட்டுவிடுமே என்கிற பயம், இரண்டாவது சுவர்.

சுவர்கள் இப்போது இடிந்து கொண்டிருக்கின்றன.

குறைபாடுகளற்ற மனிதன் எப்படிச் சாத்தியமில்லையோ, அப்படியே குறைபாடுகளற்ற இயக்கமும் சாத்தியமில்லை. முழுமை என்பது வெறும் மாயைதான். நூற்றுக்கு நூறு ஒத்துப்போவது முழுமையான, குறைகளற்ற இயக்கத்தின் தோற்றத்திற்காகக் காத்திருப்பது வெறும் தப்பித்தல் வாதமே என்பதை உணர்கிறேன்.

நம்கருத்துக்களோடு பெரும்பான்மை ஒத்துப்போகிற இயக்கத்தில் நான்-இல்லை-நாம் விரைவில் சேர்ந்து விடலாமா? உன்யோசனைகளையும் எழுது ரேவதி!

நம் தனிமனிதச் சுதந்திரங்கள் பாதிக்கப்படத் தான் செய்யும். நம் விடுதலையை விட நாட்டின் விடுதலைதான் முக்கியம் என்று நாம் நம்புவது உண்மையானால், சில கட்டுகளுக்குள் நாம் அடங்கித்தான் ஆகவேண்டும்.

நான் தயாராகி விட்டேன். இது நம் நட்பின் சாதனை.

தோழமையுடன்,

பாண்டியன்

(பாண்டியனின் இந்தக் கருத்தை விமர்சித்து வாசகர்கள் பாண்டியனுக்கும், ரேவதிக்கும் கடிதம் எழுதலாம்)

**சுட்டி இலவசம்**

நீங்கள் பெற்ற பயனை உங்கள் நண்பர்களும் பெறட்டுமே! சுட்டியைக் கேள்விப்படாத விரும்பி ஏற்கக்கூடிய புதியவர்களின் முகவரிகள் எவ்வளவு வேண்டுமாயினும் அனுப்புங்கள். உங்கள் சார்பில் அவர்களுக்கு ஒரு மாதிரி இதழ் இலவசமாக அனுப்புகிறோம்.



FREE E - BOOKS , www.thamizham.net.,

# நமது பேரிக்காய் மருத்துவம்

பேரிக்காய் ஆப்பிளின் வகையைச் சார்ந்தது; எனினும் ஆப்பிளில் அறவே இல்லாத விட்டமின் A இப்பழத்தில் உள்ளது. ஆப்பிளைவிட இது விலை மலிவு என்றாலும் ஆப்பிளைவிட பல மருத்துவ குணங்கள் உடையது.

பேரிக்காய் கிடைக்கும் காலத்தில் அடிக்கடி சாப்பிட்டு வந்தால் உடலுக்கு நல்ல சுண்ணாம்புச்சத்தும், இரும்புச்சத்தும் கிடைக்கும். எலும்புகள், பற்கள் பலப்படும். இதயம் வலுவாகும்.

இரைப்பை, குடல், பிற ஜீரண கருவிகளைப் பலமாக்கும் ஆற்றல் இதற்கு உண்டு. இதை அடிக்கடி உண்ணும்போது நல்ல பசியும் எடுக்கும்; ஜீரணமும் நன்றாக ஆகும்., கிராணி என்னும் வயிற்றுப்போக்கை நிறுத்தும் சூரன் பேரிக்காய்.

திடீரென இதயம் சிலருக்குப் படபடக்கும். மனதில் அச்சம் தோன்றும்; வியர்வை ஏற்படும்; கை கால் உதறும். இப்படிப்பட்டவர்கள் பேரிக்காயைத் தொடர்ந்து சாப்பிட்டால் இந்தப் பலவீனங்கள் நீங்கும் மன உறுதியும், மனத் தென்பும் ஏற்படும்.

சிறுவர்கள் கட்டாயம் சாப்பிட வேண்டிய பழம் இது. அவர்கள் எலும்புகளும், பற்களும் பலமாக இருக்கவும், பல் நோய்கள் வராமல் இருக்கவும் பேரிக்காய் துணை செய்யும்.

கர்ப்பிணிகள் பேரிக்காயைச் சாப்பிட்டு வந்தால் பிறக்கும் குழந்தை நல்ல திடமாக, ஆரோக்கியமாக இருக்கும். பால் கொடுக்கும் தாய்மார்களுக்கும் பேரிக்காய் தோழன்தான். அடிக்கடி சாப்பிட்டால் தேவையான பால் சுரக்கும்.

- சித்தன்

"நமது மருத்துவ"த்தில் இதுவரை இடம் பெற்றவை (இதழ் எண்ணுடன்):

வாழைப்பழம் (4), கத்தரிக்காய் (6), நெல்லிக்காய் (7), துளசி (8), பப்பாளி (10), காரட் (11), மாம்பழம் (17), தக்காளி (18), திராட்சை (19), கொய்யா (20), ஆப்பிள் (21), முருங்கை (22), அவரை (23), கீரை (24), அன்னாசி (25), புளியம்பழம் (26), சந்தனம் (27), மல்லிகை (28), வெற்றிலை (29), ரோஜா (30), மிளகாய் (31), சுண்ணாம்பு (32), முட்டை (33), தேங்காய் (34), கசகசா (35), உப்பு (36), வெங்காயம் (37), பூண்டு (38), இலந்தை (39), பேரீச்சம் (40), மாதுளம் (41), தண்ணீர் (42), எலுமிச்சை (43), சீரகம் (44), எள் (45), பால் (46), தாமரை (47), மஞ்சள் (48), இஞ்சி (49), விளாம்பழம் (50), மிளகு (51), தேன் (52), வெள்ளரிக்காய் (53), வெந்தயம் (54), வாழைத்தண்டு (55), சிரிப்பு (56), கண்ணீர் (57), சூரியன் (59), இசை (60), வண்ணம் (61), பிரமிட் (62), தூக்கம் (63), பாதுப்பிரிவு (64), விட்டமின் A (65), பொட்டாசியம் (66), பாஸ்பரஸ் (67), இரும்பு (68), விட்டமின் C (69), ஞாபகம் (70), விட்டமின் E (71), காந்தம் (72), மகிழ்ச்சி (74), நகம் (75), சிறுநீர் (76), கண் (77), நமது எளிய மருத்துவம் (80-95), கறிவேப்பிலை (85), நவமணி (86), வேப்பம்பூ (87), புதினா (88), தயிர் (89)



FREE E - BOOKS , www.thamizham.net.,

# புட்டிப்பானங்கள் பாதுகாப்பானவையா?

புட்டிகளில் அடைத்து வழங்கப்படும் பானங்களை ஆங்கிலத்தில் "மென்மையான பானங்கள்" (SOFT DRINKS) என்று அழைக்கிறார்கள். இந்தப் பெயர் மதுபானம் அருந்தாதவர்களைக் கவர்ந்திழுக்க வைக்கப்பட்டதாக இருப்பினும், இந்தப் பெயர் இதற்குப் பொருத்தமே இல்லை.

ஏனெனில் இந்தப் பானங்கள் நாம் நினைப்பது போல மென்மையான, தீமைதராத பானங்கள் அல்ல! விளம்பர நிறுவனங்களின் வார்த்தை வியாபாரிகளைக் கொண்டு போதை தரும் வார்த்தைகளால் அலங்கரிக்கப்பட்டே இந்தப் பானங்கள் நச்சுத் தன்மை தெரியாமல் (FIZY,ZINGTING, TANGY) - போன்ற கற்பனை சொற்களால் நம்மை மயக்குகின்றன.

பொதுவாக புட்டிகளில் அடைக்கப்படும் பிரபல பானங்களில் உள்ளவை: 200 மி.லி. கரியமல வாயு நிரப்பிய நீர்; 4 தேக்கரண்டி சர்க்கரை, கொஞ்சம் எரிக்கப்பட்ட சர்க்கரை (காரமல்), சாயப்பொருள்; பாஸ்பாரிக் அல்லது சிட்ரிக் அமிலம், சிறிதளவு மணமிக்க மூலிகை எண்ணெய்கள். சில பானங்களில் 20-30 மி. கிராம் காபின் (காபியில் உள்ள நச்சுப் பொருள்) கலக்கப்படுகிறது.

மேற்கண்ட கலவையில் தண்ணீரும், சர்க்கரையும் தவிர வேறெதுவும் மனித உடலுக்குத் தேவையானவை அல்ல. அதிலும் இந்த சர்க்கரை மட்டும் சுமார் 100 கலோரிகள் வெப்ப சக்தி மட்டும் தருகிறதே தவிர வேறு எந்தச் சத்தும் இதில் இல்லை. இந்தச் சர்க்கரை தரும் வெப்ப சக்தி, வேறு சத்துப் பொருட்களை உண்ண முடியா பசியின்மையையும் ஏற்படுத்துகிறது.

இப்பானங்களை அடிக்கடி பருகுவதால் இதில் உள்ள அமிலங்கள் பற்களைப் பாதிக்கின்றன. இரும்புச் சத்தை உடல் ஈர்க்கும் தன்மை குறைகிறது. மேலும் காபினும், சாயப் பொருளும் பல நோய்களுக்குக் காரணமாகின்றன. ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பின் கெட்டுப்போகும் தன்மை படைத்த இந்தப் பானங்களில் இறுதி நாள் (Expiry date) பற்றிக் குறிப்பிடப்படுவதே இல்லை. பிரபல பானங்களின் லட்சணமே இது வென்றால், பிரபலங்களின் புட்டிகளில் தரப்படும் போலி பானங்களின் ஆபத்து பற்றிச் சொல்ல வேண்டியதே இல்லை.

இந்தத் தீமை தரும் புட்டிப் பானங்களுக்குக் கூசாமல் ரூ.3 வரை விலை போட்டு விற்கிறார்கள். (வெளிநாடுகளில் காப்பி-டீயை விட இப்பானங்கள் விலை குறைவு) இந்தக் காசிற்கு 10 வாழைப்பழமோ, 15 கொய்யாப்பழமோ வாங்கினால் ஒரு குடும்பத்திற்கு ஒரு நாளைக்குரிய சத்துள்ள பழத்தேவை, பூர்த்தியாகும்.

கோடையில் நம் உடல் வெப்பத்தையும், தாகத்தையும் தணிக்க தூய்மையான தண்ணீரை விடச் சிறந்த பொருள் ஏதுமில்லை. இளநீர், பதனீர், தூயநீரில் தயாரான எலுமிச்சைச்சாறு, நீர்மோர் இவை அனைத்தும் புட்டிப் பானங்களை விட மலிவானவை மட்டுமல்ல, சிறந்தவையும் கூட.

- சித்தன்.



FREE E - BOOKS , www.thamizham.net.,

# தினமணிக்கு ஒரு மறுப்பு

"பெண்களுக்குச் சொத்துரிமை" என்ற தலைப்பில் 09.05.89 அன்று தினமணி ஒரு தலையங்கம் எழுதியுள்ளது.

"திருமணத்திற்குப் பிறகு பெண்கள் புகுந்த வீட்டின் 'உடைமை'யாகிவிடுவதால், அவளுக்குரிய சொத்தும், அவளுடைய கணவன் அல்லது வீட்டாரின் கட்டுப்பாட்டிற்கு வந்து விடுகிறது" என்பது தினமணியின் வாதம். சொத்தில் பங்குண்டு என்றால், பெற்றோரின் கடனிலும் பங்குண்டா என்றும் கேட்கிறது? மேலும் சில வாதங்களையும் முன்வைத்து, இந்தச் சட்டம் ஒரு 'குறுக்கு வழி' என்றும், இது உதவாது என்றும் தினமணி தன் தீர்ப்பைக் கூறியுள்ளது. இதைவிடப் பிற்போக்குத் தனமாய் இனியாரும் எழுதிவிட முடியாது.

பெண்கள் பிறந்த வீட்டினருக்கோ, புகுந்த வீட்டினருக்கோ 'உடைமை'ப் பொருள்களாக இருக்க வேண்டியவர்களா? உயிரற்ற ஜடமா பெண்? பெண்ணை வெறும் 'உடைமைப் பொருளாகவே' பார்க்கும் தினமணியின் ஆணாதிக்கப் பார்வை கடுமையான கண்டனத்திற்குரியது.

'கடனிலும் பங்குண்டா?' என்பது அடுத்த கேள்வி. கடன் போக எஞ்சிய சொத்தே பங்கு வைக்கப் படுகிறது. கடன், சொத்தை மிஞ்சுமானால், அன்னாரின் பிள்ளைகள் சொத்தற்றவர்கள் ஆகின்றனர். அதுவும் சட்டப்படி சொத்துக்களின் பேரில் பத்திரம் பதிவு செய்து, பெற்ற கடன்களுக்கே பொருந்தும். ஆகவே, இது ஒரு பெரிய சட்டப் பிரச்சனையன்று.

'தினமணி'க்கும் இந்த உண்மைகளெல்லாம் தெரியும். ஆனால், சனாதன மரபுகளில் ஊறிப்போன, பெண்ணடிமைத்தனத்தை நிலை நிறுத்த விரும்புகிற 'தினமணி', பெண்களுக்கான சொத்துரிமையை எதிர்க்க நொண்டிக் காரணங்களைத் தேடுகிறது.

சொத்துரிமையற்ற சமூகமே நம் லட்சியமாக இருக்க வேண்டும். அச்சமூகம் உருவாகும் வரை, அனைவருக்கும் சொத்தில் சம உரிமை என்பது தானே நியாயம்!

-கறுப்புச்சட்டை

## புதுக்கவிதைப் போட்டி முடிவுகள்.

போட்டிக்கு வந்த கவிதைகள் பெரும்பாலும் பாடு பொருளை விட்டு விலகியும், 15 வரிகளுக்கு மேலாகவும் அமைந்துள்ளன. எஞ்சிய கவிதைகள் எதுவுமே முதற்பரிசுக்குரியதாக இல்லை என நடுவர்கள் தீர்ப்பளித்துள்ளனர். எனவே தேர்ந்து வெளியிடப்படும் 4 கவிதைகளுக்கு இரண்டாம் பரிசு அளிக்கப்படுகிறது.

*பரிசுக்குரியோர்:*

1. விஜயாரத்னம், 3 தெற்கு கோபுரவாசல் தெரு, மன்னார்குடி-614 001. 2. அ.செல்வமணி, 16, இரண்டாவது வீதி, திரு.வி.க.நகர், முதலியார் பேட்டை, புதுவை-605 004. 3. தி.குமார், ஆசிரியர் காலனி, ஒக்கூர், சிவகங்கை வட்டம், 623 557. 4. க. மோகனரங்கன், அஞ்சல் நிலையத் தெரு, அரசம்பட்டு - 606 401, தெ. ஆ. மாவட்டம்.



FREE E - BOOKS , www.thamizham.net.,

## ரப்பர் மரத்திற்கு ரணங்கள் புதிதல்ல - 1

குடிசையில் பிறந்த போதும்
கூவத்தில் குளித்த போதும்
குப்பை மேட்டில் வளர்ந்த போதும்
கூழ் குடிக்கத் தவித்த போதும்
பிஞ்சுக் கால்களால் பாரத்தைத் தாங்கிய போதும்
தொடங்கிய எங்கள் தள்ளாட்டம்
பசி மயக்கத்தில் வளர்ந்து
சுமை ஏற்றத்தில் தழைத்து
முதுமையிலும் முடிவு பெறாதது!
எங்கள் தொழிலில் நாங்கள் தள்ளாடிப் பெற்ற
தழும்புகள் - ஆறாத வடுக்கள்!
நாங்கள் பிழியப் பிழிய
வேலை வாங்கப்படும் தொழிலாளிகள்!
எங்களுக்கு இது பழகிய பாதை
பள்ளங்கள் இங்கே புதிதல்ல!



- விஜயரத்னம்

## ரப்பர் மரத்திற்கு ரணங்கள் புதிதல்ல - 2

எலே பரப்பயல தள்ளி நில்லுடா
சேரி நாய்க்கு
செருப்பு கேக்குதா
யார் திருந்தினாலும்
இந்தப் பரப்பயலுங்க
திருந்த மாட்டானுங்க
எல்லோரையும் காலில் கொத்திய
தீண்டாமை நாகம்
இவர்களை மட்டும்
கண்ணில் கொத்தியது
சேரிக்காடுகளில்
தினம்தினம் ரத்தம் சொட்டி
தழும் பேறிப் போன
இந்த ரப்பர் மரங்களுக்கு
ரணங்கள் புதிதல்ல!



-அ. செல்வமணி



FREE E - BOOKS , www.thamizham.net.,

*With best compliments from:* Phone: Offi: 20402, Fact: 20420, Resi: 23402

# RAMAMURTHY OFFSET PRINTERS

*Leading Manufacturers of:*
All types of calendars, Keychains, Plastic Novelties and Diaries
106-A/3, P.K.S.A. Arumugam Road, P.B.No.33,
SIVAKASI - 626 123.

## AGENTS WANTED

Those who are interested to book orders for our products on commission basis may write to us.



FREE E - BOOKS , www.thamizham.net.,

# கண்பட்டுவிடப்போகிறது..

ஒருவர் புகழ்பெற்று விட்டால் அல்லது செல்வம் சேர்த்துவிட்டால் போதும் அல்லது அழகாக இருந்தால் போதும் பிறர் கண்பட்டு விடுமாம்-ஏதேதோ தீமைகள் வருமாம். இதற்கு திருஷ்டி சுற்றிப் போடுவதென்ன! பூசணிக்காயும், படிகக்கல்லும், செப்புத்தகடும், கறுப்புக்கயிறும் இந்த தீமைகளை எதிர்க்கும் பாதுகாப்பு கவசங்களாம்!

அட! நாம் இருப்பது 20 ஆம் நூற்றாண்டின் இறுதியில்! உலகம் முழுவதும் மறைந்து கொண்டிருக்கும் இந்தப் பழைய கற்காலத்துப் பழக்கங்களை, இந்தப் புண்ணிய பூமியில் உள்ளவர்கள் மட்டும் இன்னும் ஆழமாக நம்பிக்கொண்டிருக்கும் அவலம் அருவருப்பாக இல்லையா?

எந்த அறிவுப்பூர்வமான ஆதாரமும், இன்றி, பகுத்தறிவுக்கு அறவே பொருந்தாத இந்த நம்பிக்கை படித்தவர்கள் என்று சொல்லப்படுகிறவர்கள் மனதில் கூட நச்சுக் கொடியாகப் படர்ந்துள்ளதே! சிந்தித்துப் பார்த்தால் இந்த மூடப்பனிப்படலம் மறையும். முதல்வர் கருணாநிதியும், பிரதமர் ராஜீவும், சோவியத் கோர்பசேவும், அமெரிக்க புஷ்ஷும் தினம் தினம் எத்தனை பேர் கண்களில் விதம் விதமாகப் பட்டுக் கொண்டிருக்கிறார்கள்! திட்டப்படுகிறார்கள்; புகழப் படுகிறார்கள். இந்த மனித வெள்ளத்தின் விருப்பு வெறுப்பின் பாதிப்பு இவர்களை என்ன செய்திருக்கிறது?

தஞ்சாவூர் கோவிலின் பிருமாண்டமும், தாஜ்மகாலின் எழிலும் தினம் தினம் பலர் பார்வை பட்டு தேய்ந்தா போய்விட்டன? கட்டி முடித்த குட்டி வீட்டுக்குத் திருஷ்டி பூசணிக்காயும், பூதமுகமும் வைப்பவர்கள், இந்த மாபெரும் கட்டடங்களுக்குப் பலர் கண்பட்டு என்னதான் ஆகிவிட்டது என்று எண்ணிப் பார்க்க வேண்டும்!

திரைப்படத்திலும் தொலைக்காட்சியிலும் மீண்டும் மீண்டும் தோன்றும் நபர்களை எத்தனை விதமாக எத்தனை பேர் பார்க்கிறார்கள்? எத்தனை வாரி பூசணிக்காய் உடைத்தாலும் இந்த திருஷ்டி அழியாதே!

சைக்கிள் ரிக்ஷாவிலும் ஆட்டோவிலும் பாதுகாப்புக்காக கறுப்புக் கயிறும் எலுமிச்சம் பழமும் கட்டியும் விபத்துக்குள்ளாவதைத் தடுக்க பலரால் முடியவில்லையே! எலுமிச்சம் பழம் நசுக்காமல், பூசணி உடைக்காமல், கிளம்பிய விண்வெளிக்கலம் நிலாத்தரையில் மனிதனைப் பாதுகாப்பாக இறக்கி, மீட்டுவந்ததைப் பார்த்த 20 ஆண்டுகளுக்குப் பிறகும்... சே! நாம் திருந்த மாட்டோமா?

-அஞ்ஞானி.

## சுட்டி சந்தா

12 இதழ்களை அஞ்சலில் பெற ரூ.12 பணவிடை (M.O.) செய்யுங்கள். ஒவ்வொரு இதழையும் தவறாமல் பெற சந்தாதாரராவதே சரியான வழி.

முகவரி: சுட்டி, அஞ்சல் பெட்டி: 6888 சென்னை-600 040.



FREE E - BOOKS , www.thamizham.net.,



புதியது!

உங்கள் குடும்பத்திற்கு
அமிர்தாஞ்சன் நிறுவனம்
வழங்கும்
இன்னுமொரு தயாரிப்பு



அமிர்தாஞ்சன் கோல்ட் ரப்.
இதமான, மென்மையான
ஜலதோஷ நிவாரணி —
நலம் தரும் யூக்கலிப்டஸ்
(நீலகிரித் தைலம்)
கொண்டது.

அமிர்தாஞ்சன்
கோல்ட் ரப்
மார்ச்சளியிலிருந்தும்,
மூக்கடைப்புத்
தொல்லையிலிருந்தும்
விரைவாக நிவாரணம்
தரக்கூடியது.

குறிப்பாக,
குழந்தையின்
மென்மையான
சருமத்திற்கு மிகவும்
இதமானது —
அன்னையின்
அரவணைப்பைப் போல




புதிய
அமிர்தாஞ்சன் கோல்ட் ரப்




FREE E - BOOKS , www.thamizham.net.,

## "முனிகாடு"

(அலிபூர் ரகீம் எழுதிய, "சுதந்திர விலங்குகள்" என்னும் நூல், "முனிகாடு என்னும் ஒரு தோட்டிக்கு" என்ற தலைப்பில், காணிக்கையாக்கப்பட்டுள்ளது. அந்தக் "காணிக்கை"யிலிருந்து சில பகுதிகள்...)

● அந்த முனிகாடுவை எனக்கு நெடுங்காலமாகவே தெரியும். ஒய்ந்த காலத்து முனிகாடுவின் உடம்பு ஒடுங்கிய தோற்றம், என் நெஞ்சில் இப்போதும் நிழலாடிக் கொண்டிருக்கிறது. நிலம் நோக்கிப் போட்ட கூன், மலக்கூடை சுமந்து சுமந்தே தோள்பட்டை கிழிந்த சட்டை, அடிக்கடி நிமிர்ந்து குனிவதால், தேய்ந்து, தொய்ந்து, தோரண நூல்கள் தொங்கவிட்ட காலசட்டை விளிம்புகள்...

● வேடிக்கை என்னவென்றால், இந்த அசிங்கங்களை உற்பத்தி செய்த அதன் சொந்தக்காரர்கள், மூக்கைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு, முகம் சுளித்து ஒதுங்கி நிற்பார்கள். அவனோ–

● குழந்தையைக் குளிப்பாட்டும் தாயாக அந்த அசிங்கங்களை நீக்கிச் சுத்தம் செய்வான். மனிதர்களின் நாட்காலை எச்சங்களை, தினம் தினம் தன் வேர்வைகளால் முத்தமிட்டே கரைந்து போன ரசக் கற்பூரம் அவன்.

● யாரும் அவனை 'டேய்' என அழைக்கலாம் அவனோ, சின்னப் பிள்ளை எதிரே வந்தாலும், 'சாமீ என வணங்கி வழி விடுவான்.


● ஒருநாள் – எந்த வண்டியில் குப்பைகளை அள்ளிப்போட்டுக் கொண்டு போவானோ, அதே வண்டியில் முனிகாடுவின் பிணம். அவன் சவ ஊர்வத்தில் கலந்து கொள்ளலாமா என்று ஒரு கணம் எண்ணினேன். அதே நொடி, என்மானுடக் காதல் கண்கள், கவுரவக் கறுப்புக் கண்ணாடி அணிந்து கொண்டன. என்னை நானே மன்னித்துக் கொள்ள முடியாத சில நிகழ்ச்சிகள், என் வாழ்க்கையில் உண்டு. அவற்றுள் மிக முக்கியமானது, முனிகாடுவின் இறுதிப் பயணத்தில் நான் கலந்து கொண்டு வழி அனுப்பாதது.

சுட்டியின் அனைத்து அஞ்சல் தொடர்புகளுக்கும்:
"சுட்டி"
அஞ்சற்பெட்டி எண்: 6888, சென்னை – 600 040.



FREE E - BOOKS , www.thamizham.net.,

பதிவு எண் : TN/MS (N) 317




ஒளிப்படம் : எஸ்.சேஷகிரி

http://www.thamizham.net
FREE E - BOOKS (TAMIL)
தமிழ்க்கனல்

FREE E - BOOKS , www.thamizham.net.,

அண்ணாநகர், சென்னை-600 040.